https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842

19-2 April 2025

# பனையடி நாவலில் எடுத்துரைப்பியல் கோட்பாடு

**முனைவர் வை. அருள்செல்வி**
உதவிப்பேராசிரியர்
முதுகலைத் தமிழ்த்துறை
அரசுக் கல்லூரி, மூணாறு, கேரளா

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியப் பரப்பு பரந்து விரிந்தது.உலக இலக்கியங்களில் தோன்றும் புதுவகையான இலக்கியங்களுக்கும் வித்து தமிழ் இலக்கிய,இலக்கணங்களில் காணப்படுகிறது. அனைவராலும் மிகையாகப் போற்றப்படும் வீரயுகப் பாடல்களை உலக இலக்கியங்களில் காணப்படுகின்றன.அவற்றை விஞ்சிய கருத்துக்களுடன் புறநானூறு இருப்தை யாராலும் மறுக்க இயலாது.ஐரோப்பியரின் வருகையால் உரைநடை இலக்கியம் வளர்ச்சியடைந்தது என்று வரலாறுகள் அடையாளப்படுத்தினாலும் அதற்கு முன்னோடியாக உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் இருந்தது தமிழுக்கானத் தனி அடையாளம். தமிழ் இலக்கியங்களின் ஆழத்தைப் போலவே தமிழியல் ஆய்வு வரலாறும் அவ்வாறனதே. பல்துறை ஆய்வுகள் படிநிலை வளர்சியில் ஆராயப்படுகின்றன.தற்காலத்தில் மிகவும் கவனம் செலுத்துகின்ற கோட்பாடாக எடுத்துரைப்பியல் கோட்பாடு எல்லோராலும் அணுகப்படுகிறது.ஒரு படைப்பாளனுக்கு தன் படைப்பை வாசகரிடம் கொண்டு சேர்ப்பதற்கு எடுத்துரைப்பியல் எவ்வளவு இன்றியமையாதது.தமிழ் ஆய்வுவலகில் இக் கோட்பாட்டின் தொடக்கம் எவ்வாறு பார்க்கப்படுகிறது.அதன் வேர்களை வளர்த்தவர்கள் யாவர் என்பதையும், நவீன இலக்கிய வகைகளில் ஒன்றான நாவலில் பெறுமிடம் யாது,குறிப்பாக பனையடி நாவலில் திரு.செல்வம் அவர்கள் தனது கதையை எடுத்துரைப்பின் மூலம் கதையை நகர்த்திச் செல்லும் முறை ஆகியவற்றை விளக்குவதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

நுகத்தடி - போக்கியம் – மல்லாக் கொட்ட - கலியன் சம்பா - குண்டான்

**முன்னுரை**

இலக்கியம் உணர்ச்சியின் வெளிப்பாடு.படைப்பாளர் தான் உணர்ந்த அனுபவங்களை வாசகனுக்கு கடத்துவதற்கான கடத்தியாக படைப்புக்களைப் படைப்பாளர்கள் கருதுகின்றனர். எவ்வகை கருத்தாயினும் கடத்தும் வடிவம் தான் செய்யுளாகவோ, காப்பியமாகவோ, நாவலாகவோ, சிறுகதையாகவோ, கவிதையாகவோ வெளிப்படுகின்றன. கருத்துக்களும் வடிவங்களும் வேறுபடுவதைப் போலவே இலக்கியத்தை அணுகும் முறையும் வேறுபடுகின்றது. எடுத்துரைப்பியல் படைப்பாளனையோ, வாசகனையோ மையப்படுத்தாமல் படைப்பினூடே காணலாகும் கருத்தாடலை மையப்படுத்துகிறது.

**எடுத்துரைப்பியல் விளக்கமும் தோற்றமும்**

எடுத்துரைப்பியல் என்பது மனிதருடைய அன்றாட வாழ்வின் அனுபவங்களில் இருந்து பொருள் கொள்வதற்கு ஒரு பேச்சாளர் அல்லது எழுத்தாளர் எடுத்துரைக்கும் முறையே எடுத்துரைப்பியல் எனம்படும். “ஒருவர் தாம் கையாளும் பொருளைக்குறித்து, பிறரால் ஏற்றுக்கொள்ளபட்ட உண்மைககளின் அடிப்படையில் காலவரிசையில் கூறினால் சரித்திரம்

ஆகிறது. மாறாக அப்பொருள் குறித்த சரித்திரத்தை தம்முடைய உண்மைகளின் அடிப்படையில் தம்முடைய விருப்பவரிசையில் ஒருவர் தெரிவித்தால் கதையாகிறது.' எடுத்துரைப்பியல் (Narratology) கதை சொல்லுதல், கதையாடல், எனப் பலவாறு தமிழில் வழங்கப்படும் இக்கோட்பாடு அமைப்பியல் கோட்பாட்டுடன் தொடர்பு டையது'[1] என்று கூறுகிறார் பஞ்சாங்கம். மேலும் இக்கோட்பாடு பற்றி அவர் கூறும் போது 'ஒரு நிகழ்சி நடக்கிறது; அந்த நிகழ்ச்சியை மொழிப்படுத்தும் போது நடக்கிற மாற்றங்களையும், அந்த மாற்றங் களை நிகழ்த்துகிற மொழியின் தன்னிச்சை யான செயல் போக்கினையும் அடையாளம் கண்டு கொள்ள எடுத்தரைப்பியல் கோட் பாடு பயன்படுகிறது ' என்று போட்பாட் டின் பயனையும் அடிக்கோடிட்டுக் காட்டு கிறார். இதனை வடிவமைத்த பெருமை ஹெரால்டு ஜெனத் என்பவரையும் நாட்டுப் புறகதைகளை ஆராயந்த விளாதிமர் ஃபிராப் என்பவரின் முயற்சியாலும் எடுத்துரைப்பியல் கோட்பாடு தோற்றம் பெற்றது எனலாம்.

டிஸ்கோர்ஸ் (Discourse) மொழியியலில் மிகவும் முக்கியமானதொரு சொல்லாக கருதப்படுகிற இச்சொல்லைக்குறித்து, “எடுத்துரைப்பியல்: சில விளக்கங்கள் என்ற இக்கட்டுரையின் அடிக்குறிப்பு விரிவாகப் பேசியிருக்கிறது. மிஷெல் பூக்கோ என்கிற பிரெஞ்சு மொழியியல் அறிஞர் இச்சொல்லு க்கு ஒரு பன்முகப்பார்வையைக் கொடுத்திரு க்கிறார். வெகுசன வழக்கில் 'டிஸ்க்கூர்' (Discours) என்ற பிரெஞ்சு சொல்லுக்கு சொற்பொழிவு அல்லது உரை (பேச்சு) என்றே பொருள். பிரெஞ்சு அகராதியில் பொருள் தேடினால்: மேடையில் பேசுதல்; கொடுத்த தலைப்பில் விரிவாகப் பேசுதல்; சீராக முன்னெடுத்துச் செல்லும் பேச்சு; மேடைப்பேச்சுகென்று எழுதி தயாரித்த உரை என்றெல்லாம் பொருள் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் கணக்கிற்கொண்டே மொழியியலுக்குள் மிஷெல் பூக்கோ இச்சொல்லைப் பயன் படுத்தியிருக்கிறார் என்பது தெளிவு. “இலத்தீன் மொழியை வேர்சொல்லாகக் கொண்ட இப்பிரெஞ்சு சொல்லுக்கு 'சொல்லாடல்' என்ற தமிழ்ச்சொல்லை விட 'மொழியாடல்' என்ற தமிழ்ச்சொல் பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன்.” என்கிறார் முனைவர்.பஞ்சாங்கம்.மேலும் நவீன இலக்கியக் கோட்பாடுகள் என்னும் நூலில் எடுத்துரைப்பியல் பற்றிய கருதுதுக்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. மேலும் “புனைகதை எடுத்துரைப்பு என்பது தொடர் நிகழ்ச்சிகளால் ஆனது, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பு. 'புனைவு மதிப்பு' என்பது மனிதப் பிரச்சினைகளோடு தொடர்புடையவை”[2] என ஆசிரியர் தரும் குறிப்புகளும் கவனத்திற் கொள்ளதக்கவை..

## தமிழில் எடுத்துரைப்பியல்

தமிழில் எடுத்துரைப்பியல் முறை தொல் காப்பியத்திலே காணப்படுகிறது. தொல் காப்பியம் அகத்திணையியலில் கூறப் பட்டுள்ள கூற்றுக்களை சான்றாகக் கூறலாம். அக மாந்தர்கள் யார் எவ்விடத்தில் ,கூற்று நிகழ்த்தலாம் என்று வகைப்படுத்தியிருப்பது, எடுத்துரைப்பியல் ஆகும். தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, சற்றாய், பரத்தை, கண்டோர் போன்றோர் கூற்றுக்களாவர். அக இலக்கியங்களில் தோழி முக்கியான பாத்திரமாகப் காட்டப்படுகிறாள். தலைவி யின் உணர்வுகளை பெற்றோர்களை விடவும் அதிகமாகப் புரிந்து கொண்டவள் தோழியாவாள். தோழி செவிலியின் மகள் என்பதை 'தோழி தானே செவிலி மகளே'[4] (தொல்.பொருள்-123) என்னும் நூற்பா விளக்குகிறது. தோழியின் கடமை - வரப் போகும் துன்பத்தைத் தலைவிக்கு எடுத்து ரைத்தல், தலைவியின் உடன்போக்கைத் தடுத்தல், உடன் போகும்படி அனுப்பி வைத்தல், தலைவியை அனுப்பி வைத்ததால் தனக்கு நேர்ந்த துன்பம், வாய்மை, பொய்மை ஆகியவற்றைத் தலைவியைத் தேடிச் செல்வோரைக் கண்டபோது எடுத்து ரைத்தல், தாயிடம் சொல்லித் தழுவிக் கொள்ளல், துன்புறும் தாயை வருந்த வேண்டாம் என்று ஆறுதல் கூறுதல், தலைவியை வற்புறுத்துதல், - போன்றவை தோழியின் கடமை. அறஇலக்கியங்களில் கருத்துக்களை கதை சொல்லி கருத்தைக் கூறும் எடுத்துரைப்பியல் முறையையும், புலவனே நேரடியாக கருத்துக் கூறும் முறையையும் காணலாம். சிலப்பதிகாரக் கதை, கதை நிகழும் காலம், கதாபாத்திரங்கள், கதைக்கோர்வை, கதையின் உண்மைத்

தன்மை, ஆகிய அடிப்படைக் கூறுகளும் கதை நகர்விற்குக் காரணமாக வருணனை, நாடகக் கூறுகள், ஆய்ச்சியர் குரவை, கனவுகள், முற்பிறப்பின் வினைகள் ஆகி கூறுகளும் எடுத்துரைக்கப் படுகின்றன.நவீன இலக்கியங்களிலும் குறிப்பாக நாவல் இலக்கியங்களிலும் எடுத்துரைப்பு இருப்பதைக் காணலாம்.

## எடுத்துரைப்பின் முக்கியக் கூறுகள்

அறிஞர்களின் கருத்துக்களின் அடிப்படையில் எடுத்துரைப்புக் கோட்பாட்டின் அடிப்படைக் கூறுகளாக' 1.நிகழ்ச்சிகள் 2.நிகழ்ச்சிகளுக்கான வார்த்தைக் குறியீடுகள் 3.எடுதுச்சொல்லும் முறை என்ற மூன்றையும் குறிப்பிடலாம்'. இவைகளை கதை, பனுவல், எடுத்துரைப்பு என்று மொழியியல் வல்லுனர்கள் வகைப் படுத்துகின்றனர்.எடுத்துரைப்பின் முக்கியக் கூறுகளாக கோட்பாட்டாளர்கள் பல கூறுகளாக பகுத்துக் கூறியிருப்பினும் 'பனையடி' என்னும் நாவலில் இரா.செல்வம் அவர்களின் கதை, கதைக்கானகளம் ஆகிய வற்றை மனதிற் கொண்டு 1.கதை 2.கதைமாந்தர்களின் அறிமுகமும், செயல் பாடுகளும் 3.கதை ஒழுங்கமைவு, 4.கதையின் நோக்கு நிலை 5. கதைநிகழும்காலம் 6.சொல்லாடல் என்ற முறையில் இவ்வாய்வு பகுத்துக் கொள்ளப்படுகிறது.

## கதை

எடுத்துரைப்பியல் கோட்பாட்டாளர்கள் கூறும் எடுத்துரைப்பின் முக்கிய அலகுகளில் முதன்மையானது கதையாகும்.கதை என்பது கதை கூறுபவர் சொந்த அனுபவங்களைப் பிற பாத்திரங்கள் வாயிலாக்க் கூறுவதாகும். இது உண்மையை புனைந்துரைப்பது என்று கூறலாம்.படைப்பாளி தன் கருத்தை ஒரு கட்டுரையாகக் கூட எழுதிவிடலாம்,ஆனால் தான் கூறக் கருதிய அனைத்தையும் கூறிவிட இயலுமா என்பது ஐயமே. எனவே தான் எடுத்துரைப்பினை நாவலிலும், சிறுகதை களிலும் பொருத்திப் பார்க்கின்றனர். பனையடி நாவலும். ஆசிரியரின் வாழ்க்கை அனுபவங்கள் புனைந்துரைக்கப் பட்டுள் ளன. அய்யப்ப நாயக்கன் பேட்டையின் புஞ்சை நிலப் பகுதியான பனையடி எனும் நிலப்பரப்பின் விவசாயிகளின் பாடுகளைப் பேசுகிறது. நாவலின் முதற்பகுதி உரையாடல் களிலும், சம்பவங்களிலும் மனிதர் உறவுகளி லும், விவசாயச் செய்திகளிலும் எந்த மிகையுமின்றிப் பதிவாகியுள்ளன. அணில், கொக்கு, எலி, பெருச்சாலி சுட்டுத் தின்கிற வாழ்க்கை. உரையாடலில் மண்ணின் கூறுகளும், மாந்தர்களின் இயல்பும் புலனா கிறது. இது நகைச்சுவை உரையாடல்களாக அமைந்திருப்பது விவசாயிகளின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகிறது. குறு விவசாயிகளின் பிள்ளைகள் இன்னும் பள்ளிப் படைப்பைத் தாண்டுவது என்பது எளிதானதல்ல.கல்வி ஒன்றே அவர்களை நெறிப்படுத்தும், வாழ்வை செம்மையுறச் செய்யும் என்பது நிதர்சனமான உண்மை. நடுப்புள்ளையின் கனவை மழை பெய்தும் கெடுக்கிறது, பெய்யாமலும் கெடுக்கிறது.தன் மகனை வெளியூருக்கு அனுப்பி படிக்க வைக்கும் கனவை ஒவ்வொரு ஆண்டும் தடை செய்கிறது தொடக்கப் பள்ளியைத் தாண்டி உயர்நிலைப்பள்ளி, தொடர்ந்து விவசாயக்கல்லூரி வாழ்க்கை என நாவலின் களம்இடம்பெயர்கிறது. வேலைக்கான தேடல் இருபத்து ஏழாவது வயதில் குடிமைப் பணியை எழுதவேண்டும் என எண்ணி பயிற்சி மையத்தில் சேர்ந்து படித்தல். எப்படிப் படிக்க வேண்டும் என்பதை உணர்ந்து படித்தல் ஒருமுறை அல்ல மூன்றுமுறை தோல்வி நான்காவது முறை நேர்காணலில் தோல்வி என கதைத் தொடர்ந்து சென்றுதமிழ் தேர்ச்சி பெற வேண்டும் என்ற உணர்வை வாசகருக்கு ஏற்படுத்தும் எடுத்துரைப்பியல் கோட்பாட் டின் கதை அல்லது பனுவல் என்ற இலக்கை அடைந்துள்ளது பனையடி நாவல்.

## கதையும் கதை மாந்தரும்

எடுத்துரைப்பில் கதை மாந்தர்கள் இன்றிய மையாத இடம் பெறுகின்றனர். கதாபாத்திர ங்களின் உருவாக்கம் பற்றிய நுட்பமான கருத்துக்களை நீட்சே, ரோலண்ட்பர்த் போன்றோர்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டி பஞ்சாங்கம் அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார். இது வாசகர்களுக்கு தகவலை எளிதாக்குகிறது. கதை முறையின் ஐந்து முக்கிய கூறுகள் உள்ளன: விளக்கம், செயல், உரையாடல், சிந்தனை மற்றும் வெளிப்பாடு. பனையடி நாவல் எளிதாக கதைகூறும் முறையில் எழுதப்பட்டுள்ளது. வானம் பார்த்த பூமியாகிய பனையடிகிராமத்தில் நடுப் பிள்ளைக்கும், இராசகுமாரிக்கும் இரண்டா வது மகனாகப் பிறந்த தமிழின் வாழ்க்கை

யில் அவன் சந்தித்த நிகழ்வுகளையும், மனிதர்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல். நாவலாசிரியர் இரா. செல்வம் தன் வாழ்க்கையின் அனுபவங் களை புனைகதை வாயிலாக எடுத்துரைத்து ள்ளார். பனையடி நாவலில் வருகின்ற தமிழ் என்ற கதாபாத்திரம் நடுத்தர வர்க்கத்தில் அல்லது நம்மிடயே இப்படியான இளைஞர் களை அன்றாடம் பார்க்கின்ற உணர்வினை ஏற்படுத்துகிறது. .கதையும் கதை மாந்தர்ளும் இவ்வாறான உணர்வினைத் தருகின்றனர்.

## கதைமாந்தர்களின் செயல்பாடுகள்

கதை மாந்தர்கள் செயலை நிகழ்த்திக் காட்டுபவர்கள் என்பது அமைப்பியல் வாதிகளின் கருத்தாகும். எடுத்துரைப்பியல் கோட்பாட்டில் கதைமாந்தரும் அவர்களின் செயல் பாடுகளும் கதையின் இயக்கத்திற்கு காரணமாகின்றனர் என கருதுவது பொருத்தமானதாக இருக்கும். பனையடி நாவலில் வருகின்ற தமிழ், நல்லாபிள்ளை, ஆசிரியர் டேவிட், ஓட்டச்செக்கு, சகடை, செனையன், பெருச்சாளி, கள்ளானி, குள்ள நட்டான், போன்ற கதாபாத்திரங்களின் செயல்கள் வாழ்வின் சிக்கலை நிகழ்த்திக் காட்டுகிற கதாபாத்திரங்களாகப் படைக்கப் பட்டுள்ளனர். வானம் பார்த்த பூமியான பனையடியில் விவசாயம் பொழ்த்துப் போகும் போது மாற்றுத் தொழிலாக சாராயம் காய்ச்சுதல் தொழிலாக உருவெடுக் கிறது. இதனை இந்நாலவில் வரும் கதாபாத்திரங்களின் செயல்பாடுகளால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## பனுவலும் காலமும்

'மனிதப் பண்பாடு காலம் என்ற ஒன்றை ஒருமுகப்பட்ட இயங்கு நிலையாகவும் நம்மால் மாற்ற முடியாதபடிப் பொங்கி ஒழுகுகின்ற ஒன்றாகவும், ஒருவகையான ஒருவழிப்பாதை போன்றது' என்று குறிப்பிடுவார் பஞ்சாங்கம். எடுத்துரைப்பியல் கோட்பாட்டாளர்களும் காலம் என்பது கதையை உருவாக்கக் கூடிய ஒழுங்குமுறைப் படுத்துவது காலமே என்கின்றனர்.அதற்கான மொழியைக் கட்டமைப்பதும் காலம் தான்.எடுத்துரைப்பியலில் காலம் மூன்றுவகையான முக்கியக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கப் படுகிறது 1.ஒழுங்கு, 2.நிகழச்சி நடக்கும் கால அளவு 3.தொடர் நிகழ்வு. பனையடி நாவலில் ஒழுங்கு-நாவலின் தொடக்கம் பனையடி கிராமம், விவசாயிகளின் இன்னல் கள், விவசாயக்கடன், பிள்ளை களின் கல்வி, குறிப்பாக வெளியூருக்கு அனுப்பி படிக்க வைத்தல், தமிழ் விவசாயக் கல்லூரிக்குச் செல்லுதல், பின்பு கிடைத்த வேலையைச் செய்தல், அங்கு அவன் பார்க்கும் அதிகாரியின் உரிமை, அதனால் குடிமைப் பணி தேர்வை எதழுதுதல் வெற்றி பெறுதல் என கதையில் ஒழுங்கமைவு இருப்பதைக் காண முடிகின்றது. இரண்டா வதாக நிகழ்ச்சி நடக்கும் கால அளவு-முப்பத்தி இரண்டு வருட வாழ்வியலை உள்ளடக்கிய தாக கதை அமைந்து ள்ளது. தமிழ் என்னும் கதாபாத்திரத்தின் செயல் பாடுகள் நடக்கும் கால அளவே கதை நிகழும் கால அளவாக அமைகிறது. முதல் காலகட்டம் தமிழின் சிறுபிள்ளைப் பருவம், கிரமத்தின் நிலை, விவசாயத்தின் நிலை எனப் பிரிக்கலாம் இரண்டாவது கால கட்டம் என்பது தமிழின் விவசாயக் கல்லூரியில் படித்தல், அங்கு நடக்கும் நிகழ்வுகளாகப் பார்க்கலாம். மூன்றாவது காலகட்டம் என்பதை இன்றைய இளைஞர் களுக்கு உத்வேகமாக அமையும் தமிழின் குடிமைப் பணித் தேர்வும் அதனை சுற்றி நிகழும் நிகழ்வுகளாகப் பகுக்கலாம். மூன்றா வதாக தொடர்நிகழ்வுகள்-தமிழின் வாழ்க்கை யில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் தொடர்பு டையதாக அமைந்து ள்ளது. எனவே கதை, பனுவல் இரண்டிலி ருந்தும் காலத்தைப் பிரிக்க முடியாது என்ற எடுத்துரைப்பியல் கோட் பாடு நாவலில் பொருந்தி உள்ளது.

## நோக்கு நிலை

'ஒரு பனுவலை வாசிக்கும் போது வாசிக்கின்ற போக்கில் கதைசொல்லியின் நோக்கு நிலையில் நின்று வாசகனுமும் நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளுகின்றவனாக மாற்றப்படுகிறான்' இதனை ஜெனத் நோக்கு நிலை'[9] என்கிறார். நோக்கு என்பதனை தொல்காப்பியம் விளக்குகிறது. அசை, சீர், அடி ஆகியவற்றால் குறித்த பொருள் இறுதி அடியில் முற்றுப்பெற வேண்டும் என்று கூறியுள்ளார். இதைத் தொல்காப்பியர் நோக்கு என்று குறிப்பிடுகிறார். மாத்திரை முதலா அடிநிலை காறும் நோக்குதற் காரணம் நோக்கு எனப் படுமே. ஒரு பாடல் எல்லா உறுப்புகளும் கொண்டதாக

இருந்தாலும் நோக்கு இல்லையேல் அது பாட்டாகாது. பனையடி நாவலில் எடுத்துரைப்பியலில் முக்கிய கூறான நோக்கு நிலை சிறப்பாக அமைந்துள்ளது.கதையாசிரியர் தன்வரலாறு கூறும் நாவலாக இருப்பினும் வாசகனை கதைப் போக்கின் கூடவே அழைத்துச் செல்கிறார்.

## எடுத்துரைப்பில் உரையாடல் பெறுமிடம்

மனிதன் பேசும் விலங்கு என்பது சமூக வியலாளர்களின் கருத்து. மனிதன் பேச்சு, உரையாடல்மூலமாகவே கருத்தைப் பிறருக்கு கடத்துகின்றான். கருத்துக்களை நுட்பமான பேச்சின் மூலம் கதைசொல்லி கடத்துகிறான். பனுவலின் முக்கியமான தொடர்பியல் கூறாக இதனைக் குறிப்பிடலாம். கதைசொல்லி யாருக்கு இதைக் கடத்த நினைக்கிறான் அவன் தேர்ந்தெடுக்கும் உரையாடல் எவ்வாறு அமைய வேண்டுமா என்கின்ற நுட்பமான கூறுகளை எல்லாம் கருத்தில் கொண்டு எடுத்துரைப்பியல் கோட்பாட்டாளர்கள், நேரடிப் பேச்சு, மறைமுகச் சொல்லாடல், சுருக்கம், போலச் செய்தல், மொழியியல் கூறுகள், பன்முகப் பட்ட சொல்லாடல் எனப் பகுத்துள்ளனர்.

## நேரடிப் பேச்சு

பனையடி நாவலில் நேரடி உரையாடல் காணப்படுகிறது. கிராமத்தில் கடலை பயிரிடுவது, மழை பெய்யும் சூழல், வேளாண் அலுவலகம், குடிமைப் பணி தேர்வு மையம் ஆகிய பின்னணிகளில் நேரடி உரையாடல் இடம்பெற்றுள்ளது.' என்னா, அடுத்த கிணறு ஏத்தம் ஓடலாமா? கேட்டுக்கொண்டே சாடியோடு வந்தான் ராமையன். போன்ற உரையாடல்களைச் சான்றாகக் கூறலாம்.

## மறைமுக சொல்லாடல்

ஒன்று குறித்து முடிவு செய்ய அல்லது உடன்பாட்டை எட்ட வேண்டி ஒருவருடன் பேசுவது. தமிழ் இலக்கிய உலகில் இப்படிப் பட்ட சொல்லாடல்கள் காலந்தோறும் காணப்படுகிறது. பனையடி நாவலில் அண்ணன் தம்பிக்குள் நடக்கும் சொத்துரிமைப் பிரச்சனை ஊர் பஞ்சாயத்திற்கு வருகிறது.செனையன் என்னும் கதாபாத்திரம் பேசும் போது 'ஆமா அவன் பொண்டாட்டியைக் கேட்கம பதில் சொல்ல மாட்டான், அவ அவனை சீலைக்குள் முடிஞ்சு வச்சிருக்கா'[12] என்று கூறுவது அண்ணனிடம் பேசிப் பயனில்லை அவரின் மனைவி தான் அதற்குக் காரணம் என்தை மறைமுக சொல்லாடலாக வெளிப்படுகிறது.

## முடிவுரை

- எடுத்துரைப்பியல் என்பது நடக்கின்ற நிகழ்ச்சியை மொழிப்படுத்தும் போது நடக்கின்ற மாற்றங்களை அடையாளம் காண்பதற்குப் பயன்படும் கோட்பாடாகும்.
- எடுத்துரைப்பியலுக்கு பனுவல் முக்கியமான ஒன்றாகும்
- கதை உருவாக்கம் நொழிச் செயல்பாடு, மொழி புலப்படுத்தும் கருத்து ஆகியவை வடிவத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது.
- கதை சொல்பவர் கதை கேட்பவர் தொடர்பினை எடுத்துரைப்பியல் முதன்மைப் படுத்துகிறது.
- பனையடி நாவலில் கதை, பனுவல், கதாபாத்திரங்களின் செயல்கள், ஆகியவை எடுத்துரைப்பின் நோக்கில் அமைந்துள்ளன.

## அடிக்குறிப்பு

1. நவீன இலக்கிக் கோட்பாடுகள் பக் 78
2. நவீன இலக்கியக் கோட்பாடுகள் பக் 230
3. சர்வதேச தமிழாய்விதல் பாகம் 2
4. தொல்காப்பியம்-பொருளதிகாரம்
5. பனையடி பக் 25
6. பனையடி பக் 74
7. இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும் பக் 192
8. இலக்கிமும் திறனாய்வுக் கோட்பாடுகளும் பக் 194
9. பனையடி பக் 117

## துணைநூற் பட்டியல்

1. செல்வம். இரா., பனையடி - நாவல்-நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) 41-பி சிட்கோ இண்டஸ்டியல்
2. பஞ்சாங்கம்.க இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்-அன்னம், மனை எண்1. நிர்மலா நகர், தஞ்சாவூர்
3. பஞ்சாங்கம் க. நவீன இலக்கியக் கோட்பாடுகள்-காவ்யா பதிப்பகம்